DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Proceedure)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : MC 1/2020
Miscellaneous :
Sessions : RW1
Deposition of Witness for

பெயர் வெங்கடேசன்

தகப்பனார் காத்தவராயன்

எதிரி Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18/**08/2022**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.) மனுதாரர் எனது மனைவி ஆவார். எனக்கும் மனுதாரருக்கும்பிறந்த மகளின் பெயர் காவியா ஆகும். எனது மகளுக்கு என்ன வயதிருக்கும் என்றால் தோராயமாக 9 வயதிருக்கும். எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் உரையின் விவரங்கள் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. மனுதாரர் தாக்கல் செய்திருந்த மனு ஆங்கிலத்தில் இருந்ததை எனது வழக்கறிஞர் எனக்கு படித்து காண்பித்த பிறகு தான் பதில் உரை தாக்கல் செய்வதற்கான விவரங்களை என்னுடைய வழக்கறிஞரிடம் சொன்னேன்.**

**2.) திருமணத்தின் போது மனுதாரருக்கு சீர்வரிசையாக 20 சவரன் நகை இருசக்கர வாகனம் ஹீரோ ஹோண்டா குளிர்சாதன பெட்டி ஏர்கூலர் மரக்கட்டில் பீரோ தையல் மிஷன் மற்றும் வீட்டு சாமான்கள் கொடுத்ததாக மனுவில் சொல்லியிருக்கிறாரா என்றால் சொல்லியிருக்கிறார். மேற்படி விவரங்களை எனது பதில் உரையில் நான் மறுக்கவில்லை என்றால் சரிதான்.**

**3.) ஆனால் என்னுடைய முதன்மை வாக்குமூலத்தில் மேற்படி பொருட்கள் எதுவும் திருமணத்தின் போது கொடுக்கவில்லை என்று மறுத்திருக்கிறேன் என்று சொல்லிருக்கிறேன் என்றால் ஆமாம். ஆனால் தற்போது சாட்சி ஒரு சில பொருட்களை கொடுத்திருக்கிறார்கள் என்றும் ஒருசில பொருட்களை கொடுக்கவில்லை என்றும் பதில் அளிக்கிறார். எனது மகளை கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் 4 மாதங்களுக்கு முன்பு நீதிமன்றத்தில் வைத்து பார்த்தேன்.**

**4.) எனது மகள் எந்த ஊரில் எந்த பள்ளியில் படிக்கிறார் என்றால் அச்சரப்பாக்கத்தில் உள்ள சென்ஜோசப் மெட்ரிகுலேஷன் பள்ளியில் படிக்கிறார். எப்போதாவது பள்ளியில் அனுமதி வாங்கி எனது மகளை பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. எனது மகளின் இரண்டாவது பிறந்த நாள் கொண்டாடியபோது**

மனுதாரரும் நானும் சேர்ந்து தான் இருந்தோம். எனது மகளின் பிறந்த தேதி 23-05-2012 என்றால் சரிதான். இரண்டாவது பிறந் நாள் கொண்டாடியபோது தான் எனக்கும் மனுதாரருக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் இல்லை. எனது பெற்றோருக்கு விவசாயம் தான் தொழில் எனது பெற்றோருக்கு நிலம் இருக்கிறது.

5.) எங்கள் பெற்றோர் நிலத்தில் கூலிக்காக தான் ஏர் ஓட்டுவார்கள். மனுதாரரின் 20 சவரன் நகையை அடமானம் வைத்து ஏர் ஓட்டுவதற்கான கலப்பை மற்றும் சாதனங்கள் வாங்கினேன் என்றால் இல்லை. 20 சவரன் நகை யாரிடம் இருக்கிறது என்று தெரியுமா என்றால் தெரியாது. திருமணம் நடைபெற்றபோது வந்தவாசி டிப்போவில் ஓட்டுனராக பணிசெய்துக்கொண்டிருந்தேன்.

6.) திருமணத்திற்கு பின்பு வந்தவாசியில் குடியிருந்தோம் என்றால் சரிதான் வந்தவாசியில் குடியிருக்கும் போது மனுதாரர் வேலை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு குடி பழக்கம் இருக்கிறதா என்றால் இல்லை. எனக்கு குடிப்பழக்கம் இருக்கிறது என்றாலும் மனுதாரரை அடித்து துன்புறுத்தியிருக்கிறேனா என்றால் சரியல்ல. மனுதாரரை 5 சவரன் நகை வாங்கி வருமாறு அடித்து துன்புறத்தினேனா என்றால் இல்லை.

7.) நகை கேட்டு தான் நான் துன்புறுத்தியதால் தான் எனது மகளின் இரண்டாவது பிறந்த நாள் 25-02-2014 ம் தேதி மனுதாரரை வீட்டை விட்டு அனுப்பிவிட்டேன் என்றால் இல்லை. அக்டோபர் 2014 ல் மனுதாரருக்கு கிராம நிர்வாக அலுவலரின் உதவியாளராக பணி கிடைத்தது என்றால் எனக்கு தெரியாது. மனுதாரருடன் சேர்ந்து வாழ நான் ஏதேனும் முயற்சி செய்தேனா என்றால் பஞ்சாயத்து பேசினோம்.

8.) எனது மனைவியுடன் சேர்ந்து வாழ்வதற்கு என்னுடைய பதில் உரையில் விவரம் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியருக்கிறேன். 2016 ம் வருடம் வந்தவாசி நீதிமன்றத்தில் சேர்ந்து வாழ்வதற்காக ஒரு மனுவும் விவாகரத்திற்காக ஒரு மனுவும் தாக்கல் செய்தேன். மேற்படி இரண்டு மனுக்களுக்கான நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் அது பற்றி தெரியவில்லை பதில் உரையில் சொல்லியிருக்கிறேன்.

9.) எனது மகள் படிப்பிற்கு என்ன செலவாகிறது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. படிப்பு செலவு தவிர எனது மகளுக்கு தேவையான பராமரிப்பதற்காக எவ்வளவு செலவாகிறது என்று தெரியுமா என்றால் தெரியாது.

மனுதாரர் எங்கு தங்கியிருக்கிறார் என்று தெரியுமா என்றால் எலப்பாக்கத்தில் மாரியம்மன் கோவில் தெருவில் இருக்கிறார். மனுதாரர் வாடகை வீட்டில் குடியிருக்கிறாரா என்றால் அது பற்றி தெரியாது. வேறு ஒரு வீட்டில் குடியிருக்கிறார். அது மாமியார் வீடா என்று தெரியாது. திருமணத்திற்கு பின்பு மாமியார் வீட்டிற்கு சென்றிருக்கிறேன். மனுதாரருக்கு மாதம் 10 ஆயிரம் தான் மாத சம்பளம் என்றால் 25 ஆயிரம் இருக்கும்.

10). என்னுடைய மொத்த வருமானம் 26 ஆயிரம் ஆகும். மனுதாரர் பிரிந்து சென்ற பிறகு இதுநாள் வரையிலும் அவரது பராமரிப்பிற்காக பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த மனு தாக்கல் செய்வதற்கு 3 வருடங்களுக்கு முன்பான எனது சம்பள பணம் என்னுடைய எந்த வங்கி கணக்கில் பெறுகிறேன் என்றால் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா ஆரணி கிளையில் பெறுகிறேன். எனது அளிக்கும் சமபள பட்டியல் என்னால் தாக்கல் செய்யமுடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும்.

**மனுதாரர் தரப்பில் வேண்டுகோளின் படி சாட்சியான எதிர் மனுதாரரின் வருமானம் மற்றும் கடப்பாடுகள் குறித்த நிரூபன வாக்குமூலம் தாக்கல் செய்வாற்காக குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**